**16.09.2025**

**O.S.No.105/2011**

**பி.வா.சா.2 : அருணாச்சலம்**

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>**:-**

1) இந்த வழக்கு போட்ட பரமேஸ்வரி இளங்கோ, பாலகிருஷ்ணன் ஆகியோர் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் என்றால் சரிதான். நல்லதங்காள் அவர்களின் தாயார். வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்று சொன்னால் சரிதான். 2010ல் ஏற்பட்ட பாகத்தில் பரமேஸ்வரி கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பெண்களுக்கு பாகம் கொடுக்கவில்லை. நடேசனின் மனைவி நல்லத்தங்காளும் அதில் கையெழுத்துபோடவில்லை. பரமேஸ்வரிக்கு ஏதேனும் சொத்து கொடுக்கப்பட்டதா என்றால் ஓட்டு வீடு மற்றும் ஒரு பிளாட் கொடுக்கப்பட்டுள்ளது. அது பதிவு செய்து கொடுத்த சொத்தா என்றால் இல்லை. நான் சொல்வது போல பரமேஸ்வரிக்கு சொத்து எதுவும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அம்மாவுக்கு ஓட்டு வீடும் பரமேஸ்வரிக்கு பிளாட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த மனைநிலம் பதிவு செய்யப்பட்ட பத்திரமாக எழுதி கொடுக்கப்படவில்லை. வாதி பரமேஸ்வரி சேலத்தில் குடியிருக்கிறார். அவருடைய கணவர் வெளிநாட்டில் இருந்து வருகிறார்.

2) பரமேஸ்வரி திருமணத்திற்கு 2 லட்சம் கடன் வாங்கினார்கள் என்றும் சொல்லி உள்ளேன். அது யாரிடம் எப்போது கடன் வாங்கப்பட்டது என்ற விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 40000/- கொடுத்துள்ளேன். அவ்வாறு நான் கொடுத்தற்கு ரசீது எதுவும் கொடுக்கவில்லை. அது கைம்மாற்றாக கொடுக்கப்பட்டது அதனால் எழுதி வாங்கவில்லை. பிரதிவாதிகள் வாதி பரமேஸ்வரி திருமணத்திற்கு ரூ.2 லட்சம் கடன் வாங்கி திருமணம் செய்து வைத்தது பொய் என்றும் வாதிக்கு மனையும் நல்லதங்காளுக்கு வீடும் எழுதி வைத்ததும் பொய் என்று சொன்னால் சரியல்ல. பரமேஸ்வரிக்கு கொடுத்ததாக சொல்லும் மனை நிலம் பட்டா இல்லாத சொத்து அது

அரசாங்க பொறம்போக்கு நிலம். பட்டடாநிலத்தை மட்டும் 1,2 பிரதிவாதிகள் அண்ணம் தம்பி இரண்டு பேரும் பங்கு பிரிந்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

3)மேற்படி சொத்து பூராவும் நடேசனுக்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்ட சொத்து. அவர் யாருக்கும் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார். அவர் இறந்து பின்னிட்டு தான் அண்ணன் தம்பி பாகப்பத்திரம் எழுதினார்கள் என்றால் சரிதான். நடேசனின் வாரிசு சான்றிதழில் 4 பேர் வாரிசுகள் என்றால் சரிதான். வாதியும் 3ம் பிரதிவாதியும் வழக்கு சொத்துக்களை பொறுத்து எவ்வித விடுதலை பத்திரமும எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதிக்கு சேரவேண்டிய பாகத்தை பிரித்து கொடுக்காமல் ஏமாற்றுவதற்காக வாதிக்கு மனைநிலம் ஒதுக்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பிரித்து கொண்ட பாகப்பத்திரத்தின் அடிப்படையில் தான் இளங்கோ ஒரு கிரயபத்திரம் எழுதி உள்ளார் என்றால் சரிதான்.

4) அந்த சொத்தை மீண்டும் இளங்கோவே திரும்ப வாங்கி கொண்டார் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் மட்டும் எழுதி கொண்ட 2010 பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்றும் எனவே அதன் அடிப்படையில் 24.11.2014ல் ஏற்படுத்தி கொண்ட கிரயப்பத்திரமும் மீண்டும் கிரயம்பெற்ற 12.10.2015 கிரயப்பத்திரமும் சட்டப்படி செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. இளங்கோ வாங்கிய சொத்தை அவரது மனைவி பெயரில் எழுதி வைத்துவிட்டார். அதே போல பாலகிருஷ்ணனும் சொத்தை அவரது மனைவி பெயரில் எழுதி வைத்துவிட்டார். வாதிக்கு உள்ள 1/4 பாகத்தை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி வழக்கில் கோரியபடி வாதிக்கு உள்ள 1/4 பாகத்தை பிரித்து கொடுக்க பிரதிவாதிகள் கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதி மற்றும் பிரதிவாதிகள் குடும்பத்தில் ஒருபோதும் வாய்மொழி பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் எனக்கு தெரியாத சங்கதிகளை தெரிந்ததகாக 1ம் பிரதிவாதி

கேட்டுக்கொண்டதன் பெயரில் தெரிவித்து அதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.09.16 17:55:34 +0530

**Subordinate Judge, Attur.**